யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | பொருளியல் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**கவனிக்குக:-** ✶ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.


✶ 01 - 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து புள்ளடித்தாளில் (✕) இடுவதன் மூலம் காட்டுக.

01) உற்பத்தி சாத்திய வளைகோட்டிற்கு வெளியே வலப்புறமாக அமைந்த ஒரு புள்ளியானது
(1) சகல வளங்களும் உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுதலைக் குறிக்கும்.
(2) வினைத்திறன் மட்டம் அதிகரித்தலைக் குறிக்கும்.
(3) ஒரு நாட்டின் இறக்குமதி நுகர்வுப் பொருட் குவியலைக் குறிக்கும்.
(4) ஒரு நாட்டின் ஏற்றுமதியின் பின்னுள்ள நுகர்வின் குவியலைக் குறிக்கும்.
(5) வினைத்திறனற்ற காரணி வளப்பயன்பாட்டினைக் குறிக்கும்.

02) பின்வருவனவற்றுள் நியமக்கூற்றாக அமைவது எது?
(1) பொருளாதாரங்களில் வரையறுக்கப்படாத மனித விருப்பங்கள் காணப்படுகின்றன.
(2) நாட்டில் உற்பத்தி வளங்கள் அருமையாகக் காணப்படுகின்றன.
(3) சுற்றாடல் என்பது அருமையான வளத்திற்கான ஓர் உதாரணமாகும்.
(4) பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரிப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல.
(5) அருமைப் பிரச்சனை எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை.

03) நுகர்வில் போட்டித் தன்மை மற்றும் கொடுப்பனவைச் செலுத்தாதோரை விலக்க முடியாதிருத்தல் ஆகிய பண்புகளைக் கொண்டது.
(1) மேய்ச்சல் நிலம் (2) துன்கிந்தை நீர்வீழ்ச்சி (3) கலங்கரை விளக்கம்
(4) சூரியஒளி (5) இலவச பாடப்புத்தகம்

04) பொருளாதாரமொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடத்தில் $A$ புள்ளியிலிருந்து $B$ புள்ளியை நோக்கி உற்பத்தி நகர்வடைதலினால் கருதப்படுவது யாதெனில்
(1) பொருளாதாரம் முன்பைவிட வளர்ச்சியடைந்துள்ளது.
(2) கணனி உற்பத்தியில் வேலையின்மை குறைந்துள்ளது.
(3) கைத்தொலைபேசி உற்பத்தியில் வேலையின்மை அதிகரித்துள்ளது.
(4) கணனி உற்பத்தியில் வினைத்திறனுள்ள தொழிலாளரின் வருகை அதிகரித்துள்ளது.
(5) கைத்தொலைபேசி உற்பத்தித்துறை தனியார் மயமாக்கப்பட்டுள்ளது.

05) திருப்தியைத் தரக்கூடியதும் எதிர்கணிய வெளிவாரியையும் கொண்டுள்ள பண்டம்
(1) தீங்கிழைக்கும் பண்டம் ஆகும்.
(2) இலவசப் பண்டம் ஆகும்.
(3) தீய பொருள் ஆகும்.
(4) பொருளாதாரப் பண்டம் ஆகும்.
(5) தகுதிப் பண்டம் ஆகும்.

06) தாராள சந்தைப் பொருளாதாரமொன்றுடன் தொடர்புடையதாகக் கருதப்படக்கூடிய கூற்று

(1) உற்பத்தியில் ஈடுபடும் சகல வியாபார நிறுவனங்களும் அரசாங்க நெறிப்படுத்தல்களுக் கமைவாக அரசாங்க உரிமை கொண்டிருக்கும்.


(2) அரசாங்க நெறிப்படுத்தல்கள் தனியார் உடமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக மட்டுப்பாடு டையதாக அமையும்.

(3) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் யாவும் திட்டமிடல் குழுவின் மூலம் தீர்க்கப்படுவதாக அமையும்.

(4) போட்டித் தன்மை காணப்படமாட்டாது.

(5) வளங்களின் உரிமை தொடர்பாக அரசின் பங்கு மேலோங்கியிருக்கும்.

07) பண்டமொன்றிற்கான பின்வரும் வருமானக் கேள்வி வளையி குறிப்பது




(1) இழிவுப் பண்டம் ஒன்றினை ஆகும்.

(2) ஆடம்பரப் பண்டம் ஒன்றினை ஆகும்.

(3) அத்தியாவசியப் பண்டம் ஒன்றினை ஆகும்.

(4) குறைநிரப்புப் பண்டம் ஒன்றினை ஆகும்.

(5) தகுதிப் பண்டம் ஒன்றினை ஆகும்.

08) பொருளொன்றின் விலை நெகிழ்ச்சிக் குணகம் $-1.5$ ஆகுமெனின் இப்பொருளின் கேள்வித்தொகை வீழ்ச்சியடையுமிடத்து அதன் மொத்த வருமானம்

(1) வீழ்ச்சியடையும்

(2) அதிகரிக்கும்

(3) மாறாது காணப்படும்

(4) முதலில் வீழ்ச்சியடைந்து பின்னர் அதிகரிக்கும்

(5) தொடர்ந்து விலையில் அதிகரிப்பு ஏற்படும்.

09) பொருளொன்றிற்கான கேள்விச் சார்பு மற்றும் நிரம்பற் சார்பு கீழே தரப்படுகின்றது.

$Qd = 100 - 5p\,, Q_5 = -50 + 5p$ பின்வருவனவற்றுள் சரியான கூற்றாக அமைவது

(1) நிரம்பல் வளையி கிடையச்சினை வெட்டிச் செல்லும்.

(2) கேள்வியின் ஆகக் கூடிய கேள்வித்தொகை, ஆகக் குறைந்த நிரம்பல் தொகை இரண்டும் சமனாகும்.

(3) 5 ரூபா அலகு வரி விதிக்கும் போது நுகர்வோன் செலுத்தும் விலை ரூபா 17.50 ஆகும்.

(4) நிரம்பல் வளையி நெகிழ்வற்ற கோடாக அமையும்

(5) ரூபா 10 விலையில் மிகைக் கேள்வி அளவு 80 அலகுகளாகும்.

10) மாதாந்தம் $50/=$ கட்டணத்தில் நிறுவனமொன்றின் தொழில்நுட்ப சேவையினை $10$ மில்லியன் மக்கள் நுகருகின்றனர். நிறுவனம் பொருளின் $50$ சதவீதம் அதிகரிக்கும் போது நிறுவனத்தின் வருமானம் $100$ மில்லியன் ரூபாவால் உயருமாயின் சேவையின் விலைக் கேள்வி நெகிழ்ச்சி யாது?

(1) $1.5$ (2) $-1.4$ (3) $-0.4$ (4) $0.4$ (5) $-0.8$


11) ஒரு நபரின் வருமானமானது $10$ சதவீதம் அதிகரிக்கும் போது $x$ பண்டத்தின் வருமான நெகிழ்ச்சி $-0.6$ ஆகவும் $z$ பொருளின் வருமான நெகிழ்ச்சி $1.5$ ஆகவும் உள்ளது. இந்நிலையில் நபர் $x$ மற்றும் $z$ பொருளின் கேள்வி அளவினை முறையே $1000, 800$ இலிருந்து எவ்வளவு அளவால் மாற்றுவான்.

| | $x$ பொருள் | $z$ பொருள் |
|---|---|---|
| (1) | 60 அலகால் குறைப்பான் | 120 அலகு குறைப்பான் |
| (2) | 120 அலகு குறைப்பான் | 120 அலகு அதிகரிப்பான் |
| (3) | 100 அலகு குறைப்பான் | 120 அலகு அதிகரிப்பான் |
| (4) | 60 அலகு குறைப்பான் | 120 அலகு அதிகரிப்பான் |
| (5) | 120 அலகு அதிகரிப்பான் | 60 அலகு குறைப்பான் |

12) சாதாரண கேள்வி நிரம்பல் நிலைமைகளின் கீழ் ஒரு பண்டம் தொடர்பாக உற்பத்தியாளர் மிகை வரிச் சுமையை விட நுகர்வோர் மிகை வரிச் சுமை அதிகமாக இருக்கக்கூடிய சந்தர்ப்பம் எது?

(1) நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிவுள்ள நிரம்பலும் உள்ள போது
(2) நெகிழ்வற்ற நிரம்பலும் நெகிழ்வுள்ள கேள்வியும் உள்ளபோது
(3) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் உள்ள போது
(4) பூரண நெகிழ்வுள்ள கேள்வியும் நெகிழ்வற்ற நிரம்பலும் உள்ள போது
(5) நெகிழ்வற்ற கேள்வியும் நெகிழ்வுள்ள நிரம்பலும் உள்ள போது

13) பின்வரும் வரைபடம் சாதாரண பண்ட உற்பத்தியொன்றின் சந்தையைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.




அரசாங்கம் 15 ரூபா விலையினை இழிவு விலையாக நிர்ணயிக்கின்றது. இழிவு விலையில் ஏற்படும் மிகை நிரம்பலை நிறுவனம் ஏற்றுமதி செய்வதாகக் கருதுக. இந்நிலையில் உற்பத்தியாளர் மொத்த வருவாயாக அமைவது

(1) 1875 ரூபா (2) 750 ரூபா
(3) 1000 ரூபா (4) 1225 ரூபா
(5) 1250 ரூபா

14) பண்டமொன்றின் கேள்விச் சார்பு $Qd = 1000 - 10p$ ஆகும். சமநிலை விலை 50 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக வீழ்ச்சியடையும் போது பின்வருவனவற்றுள் சரியானது

| | விலை வீழ்ச்சியின் பின் நுகர்வோன் மிகை | புதிய நுகர்வோரின் நுகர்வோர் மிகை |
|---|---|---|
| (1) | 12500 ரூபா | 500 ரூபா |
| (2) | 18000 ரூபா | 500 ரூபா |
| (3) | 500 ரூபா | 18000 ரூபா |
| (4) | 500 ரூபா | 12500 ரூபா |
| (5) | 25000 ரூபா | 36000 ரூபா |

15) விவசாயப் பண்டமொன்றிற்கான கேள்வி சார்பளவில் நெகிழ்வற்றதாகக் கருதுக. இப்பொருளின் அறுவடை அதிகரிக்குமாயின் அது பின்வருவனவற்றுள் எதனை ஏற்படுத்தும்?

(1) விலையில் ஒரு வீழ்ச்சி மற்றும் மொத்த வருவாயில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
(2) விலையிலும் மொத்த வருவாயிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும்
(3) விலையிலும் மொத்த வருவாயிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தும்
(4) விலையில் அதிகரிப்பும் வருவாயில் வீழ்ச்சியும் ஏற்படுத்தும்
(5) விலை மாற்றமடையாமலும் மொத்த வருவாய் அதிகரிப்பும் ஏற்படும்

16) நிறைபோட்டிக் கைத்தொழிலில் இயங்கும் நிறுவனமொன்றினது இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டின் போது

(1) நிறுவனத்தின் எல்லை வருவாய் சராசரி செலவிற்குச் சமனடையும்
(2) சாதாரண இலாபங்களை நிறுவனம் உழைக்கும்
(3) நிறுவனத்தின் சராசரிச் செலவு சந்தை விலையை விட உயர்வாகக் காணப்படும்
(4) நிறுவனத்தின் எல்லைச் செலவு பொருளின் விலைக்குச் சமனடையும்
(5) நிறுவனத்தின் எல்லைச் செலவும் சராசரி மாறும் செலவும் சமனடையும்

17) தனியுரிமை போட்டி நிறுவனத்தின் கேள்வி வளைகோடு நெகிழ்ச்சியுள்ள வளையியாக அமைவதற்குப் பொருத்தமான காரணி

(1) பண்டம் ஓரினத் தன்மையுடையதாக அமைதல் ஆகும்.
(2) நிறுவனத்தின் விளம்பரங்கள் அதிகமாக இருத்தலாகும்.
(3) அனேக எண்ணிக்கையான உற்பத்தியாளர் காணப்படுதலாகும்.
(4) போட்டிப் பண்டங்கள் இருத்தலாகும்.
(5) பொருளுக்கு அதிகளவான பிரதியீடுகள் காணப்படுதலாகும்.

18) வேறாக்கம் செய்யப்பட்டுள்ள பண்டங்களை உற்பத்தி செய்கின்ற அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் காணப்படுகின்ற சந்தை அமைப்பு

(1) நிறை போட்டிச் சந்தை
(2) தனியுரிமை போட்டிச் சந்தை
(3) தனியுரிமைச் சந்தை
(4) சிலருரிமைச் சந்தை
(5) இருவர் உரிமைச் சந்தை

19) நிறைபோட்டி நிறுவனமொன்றினது வெளியீடு 1000 அலகுகளாகும். எல்லைச் செலவு 40 ரூபாவும் சராசரி நிலையான செலவு 10 ரூபாவும் நிறுவனத்தின் அலகு அசாதாரண இலாபம் 10 ரூபாவும் ஆகுமெனின் சராசரி மாறும் செலவு யாது?

(1) ரூபா 20
(2) ரூபா 15
(3) ரூபா 35
(4) ரூபா 40
(5) ரூபா 25

20) குறுங்கால உற்பத்தி தொழிற்பாட்டில் மொத்த விளைவானது குறைந்த வேகத்தில் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைவது

(1) எல்லை உற்பத்தி அதிகரித்த வேகத்தில் அதிகரிப்பது
(2) சராசரி உற்பத்தி மாறாதிருப்பது
(3) எல்லை உற்பத்தி குறைந்த வேகத்தில் அதிகரிப்பது
(4) எல்லைச் செலவு அதிகரித்துச் செல்வது
(5) சராசரி மாறும் செலவு அதிகரித்துச் செல்வதாகும்.

21) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில்

(1) மொத்த உற்பத்தி அதிகரித்த வேகத்தில் அதிகரிக்கும் போது எல்லை செலவு சராசரிச் செலவு என்பன குறைந்து செல்கின்றது.
(2) மொத்த உற்பத்தி உச்ச நிலை எய்தும் போது சராசரி உற்பத்தி, எல்லை உற்பத்தி என்பன சமநிலையடைகின்றது.
(3) எல்லை உற்பத்தி அதிகரிக்கும் போது சராசரி உற்பத்தி குறைவடைந்து செல்கின்றது.
(4) சராசரி மாறும் செலவினை எல்லைச் செலவு வெட்டும் புள்ளியில் மொத்த விளைவு உச்சநிலை எய்துகின்றது.
(5) எல்லைச் செலவு, சராசரி செலவு என்பன அதிகரிப்பதனாலேயே மொத்த விளைவு வீழ்ச்சியடைகின்றது.

22) நிறைபோட்டி நிறுவனமொன்றின் 3ம் அலகு வெளியீட்டிற்கான மொத்த மாறும் செலவு 40 ரூபாவும், 4ம் அலகுக்கான எல்லைச் செலவு 30 ரூபாவும் 5 ம் அலகுக்கான எல்லைச் செலவு 40 ரூபாவும் ஆகும். நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு ரூபா 50 எனின் 5ம் அலகுக்கான சராசரி மாறும் செலவு யாது?

(1) 32 ரூபா
(3) 42 ரூபா
(3) 22 ரூபா
(4) 12 ரூபா
(5) 15 ரூபா

23) $x$ பொருளை உற்பத்தி செய்வதற்கான குறுங்கால எல்லைச் செலவு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| $x$ பொருள் அலகு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| $mc$ எல்லைச் செலவு ரூபா | 300 | 200 | 160 | 240 | 400 | 560 | 640 |

மொத்த நிலையான செலவு ரூபா 300 ஆயின் 5 ம் அலகு வெளியீட்டின் போது

| | **சராசரி செலவு** | **சராசரி மாறும் செலவு** | **சராசரி நிலையான செலவு** |
|---|---|---|---|
| (1) | ரூபா 60 | ரூபா 320 | ரூபா 260 |
| (2) | ரூபா 320 | ரூபா 260 | ரூபா 60 |
| (3) | ரூபா 220 | ரூபா 320 | ரூபா 80 |
| (4) | ரூபா 260 | ரூபா 340 | ரூபா 60 |
| (5) | ரூபா 80 | ரூபா 240 | ரூபா 260 |

24) திறந்த பொருளாதாரம் ஒன்றின் பண்டங்கள் பணிகள் நிலுவை சாதகமான நிலையினை அடையுமாயின்

(1) நாட்டின் நுகர்வு, முதலீடு மற்றும் அரசாங்கக் கொள்வனவுகளின் பெறுமதி மொத்த நிரம்பலை விட $(AS)$ சிறிதாக இருக்கும்.


(2) தேறிய ஏற்றுமதிகள் எதிர்ப் பெறுமானமுடையதாக இருக்கும்.

(3) மொத்தக் கேள்வி $(AD)$ மொத்த நிரம்பலை விட $(AS)$ பெரிதாகவிருக்கும்.

(4) மொத்த நிரம்பல் $(AS)$ நாட்டின் நுகர்வு, முதலீடு மற்றும் அரசாங்க கொள்வனவுகளின் பெறுமதியை விட சிறிதாகவிருக்கும்.

(5) வரிகளின் பெறுமதி ஏற்றுமதிகளின் பெறுமதிக்குச் சமனாகவிருக்கும்.

25) எளிய பொருளாதாரமொன்றின் நுகர்வு நடத்தையைக் காட்டும் வரைபடம் கீழே தரப்படுகின்றது.




நுகர்வு வளையி $C$ யில் இருந்து $C_1$ மற்றும் $C_2$ வாக மாற்றமடையும் போது பின்வருவனவற்றுள் எது மிகச் சரியாக அமைய முடியும்?

| | $C_1$ வளையி | $C_2$ வளையி |
|---|---|---|
| (1) | சுயாதீன நுகர்வு குறையும் | சுயாதீன நுகர்வு அதிகரிக்கும் |
| (2) | சுயாதீன நுகர்வு மற்றும் $mpc$ அதிகரிக்கும் | $mpc$ குறைவடையும் |
| (3) | சுயாதீன நுகர்வு மற்றும் $mpc$ குறையும் | $mpc$ மட்டும் வீழ்ச்சியுறும் |
| (4) | சுயாதீன நுகர்வு விரிவடையும் | $mpc$ அதிகரிக்கும் |
| (5) | சுயாதீன நுகர்வு மற்றும் $mpc$ குறையும் | $mpc$ மாற்றமடையாது |

26) பொருளாதாரமொன்றின் தேசிய வருமானம் தொடர்பான அட்டவணை வருமாறு

| வகை | பெறுமதி மில்லியன் ரூபா |
|---|---|
| தேசிய வருமானம் | 700 |
| தேறிய ஏற்றுமதிகள் | 100 |
| தேறிய மறைமுக வரிகள் | 100 |
| மூலதன நுகர்ச்சி | 50 |
| தேறிய கிடைத்த காரணி வருவாய் | 250 |

மேற்படி அட்டவணையிலுள்ள தரவுகளின் படி இப்பொருளாதாரத்தின் சந்தை விலையிலான உள்நாட்டுற்பத்தியின் பெறுமதி

(1) 400 மில்லியன் (2) 650 மில்லியன் (3) 850 மில்லியன்
(4) 700 மில்லியன் (5) 600 மில்லியன்

27) தரப்பட்ட பொருளாதாரமொன்றின் சாத்திய வள வெளியீட்டு மட்டம் சமநிலை வெளியீட்டு மட்டத்திலும் 240 மில்லியன் அதிகமாகும். பொருளாதாரத்தின் வரிப்பெருக்கிக் குணகம் $-4$ எனின் சாத்திய வள வெளியீட்டு மட்டத்தினை அடைவதற்கு விதந்துரைக்கப்படக்கூடியது.

(1) வரியினை 48 மில்லியனால் குறைத்தல்
(2) வரியினை 60 மில்லியனால் குறைத்தல்
(3) அரச செலவினை 48 மில்லியனால் குறைத்தல்
(4) முதலீட்டினை 60 மில்லியனால் அதிகரித்தல்
(5) வரியினை 60 மில்லியனால் அதிகரித்தல்

28) அரச துறையுள்ள மூடிய பொருளாதாரமொன்றில் எல்லை நுகர்வு நாட்டம் $(mpc)$ 0.75 எனக் கருதுக. 100 மில்லியன் முதலீடு அதிகரித்தால் நுகர்வு எவ்வளவால் மாற்றமடையும்?

(1) 300 மில்லியனால் அதிகரிக்கும் (2) 300 மில்லியனால் குறையும்
(3) 400 மில்லியனால் அதிகரிக்கும் (4) 400 மில்லியனால் குறையும்
(5) 500 மில்லியனால் அதிகரிக்கும்

29) பொருளாதாரமொன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவினை தேசிய வருமானமாக மாற்றுவதற்கு பின்வருவனவற்றுள் எத்தகைய மாற்றம் செய்யப்பட வேண்டும்?

| | பெறுமானத் தேய்வு | தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் | தேறிய மறைமுக வரிகள் |
|---|---|---|---|
| (1) | கூட்டு | கழி | கழி |
| (2) | கழி | கூட்டு | கூட்டு |
| (3) | கூட்டு | கூட்டு | கூட்டு |
| (4) | கூட்டு | கழி | கூட்டு |
| (5) | கழி | கூட்டு | கழி |

30) ஓர் பொருளாதாரமொன்றின் நுகர்வுச் சார்பு $C = 500 + 0.75y$ ஆகும். பொருளாதாரத்தில் எல்லை நுகர்வு நாட்டம் அதிகரிக்குமாயின் சமநிலை வருமானம் மற்றும் நுகர்வு மட்டங்களில் ஏற்படும் மாற்றம் பின்வருவனவற்றுள் எவ்வகையினதாகவிருக்கும்?

| | சமநிலை வருமான மட்டம் | சமநிலை நுகர்வு மட்டம் |
|---|---|---|
| (1) | மாறாது | மாறாது |
| (2) | அதிகரிக்கும் | குறையும் |
| (3) | குறையும் | அதிகரிக்கும் |
| (4) | அதிகரிக்கும் | மாறாது |
| (5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

31) பொருளாதாரமொன்றின் எல்லை நுகர்வு நாட்டம் ($mpc$) 0.60 எனவும் முதலீட்டு அதிகரிப்பின் விளைவாக நுகர்வு மட்டம் ரூபா 240 மில்லியன் அதிகரித்துள்ளது எனவும் கருதுக. பொருளாதாரத்தில் முதலீடு எவ்வளவால் அதிகரித்திருக்கும்?

(1) ரூபா 200 மில்லியன்
(2) ரூபா 400 மில்லியன்
(3) ரூபா 100 மில்லியன்
(4) ரூபா 160 மில்லியன்
(5) ரூபா 50 மில்லியன்

32) பின்வரும் அட்டவணை பொருளாதாரமொன்றின் தெரிவு செய்யப்பட்ட பேரினப் பொருளியற் தரவுகளைக் காட்டுகின்றது.

| ஆண்டு | வருமான மட்டம் (ரூபா பில்லியன்) | சேமிப்பு மட்டம் (ரூபா பில்லியன்) |
|---|---|---|
| 1 | 4000 | 1000 |
| 2 | 5000 | 1500 |
| 3 | 6000 | 2000 |
| 4 | 10000 | ? |

எல்லை நுகர்வு நாட்டம் மாறாத நிலையில் நான்காம் ஆண்டில் இப்பொருளாதாரத்தில் வருமான மட்டம் 10,000 பில்லியனாக அதிகரிக்குமாயின் புதிய சேமிப்பு மட்டம் எவ்வளவாக இருக்கும்?

(1) ரூ 800 பில்லியன்
(2) ரூ 2000 பில்லியன்
(3) ரூ 3500 பில்லியன்
(4) ரூ 4000 பில்லியன்
(5) ரூ 1000 பில்லியன்

33) பொருளாதாரமொன்றின் தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| வகை | பெறுமதி ரூ பில்லியன் |
|---|---|
| சந்தை விலை மொத்த உள்ளநாட்டு உற்பத்தி | ................ 110 |
| வீட்டுத்துறை சேமிப்பு | .................. 15 |
| தேறிய வரிகள் | .................. 25 |
| அரசாங்க கொள்வனவு | .................. 20 |
| இறக்குமதிகள் | .................. 05 |

மேற்படி அட்டவணையிலுள்ள தரவுகளின் வீட்டுத்துறை நுகர்வுச் செலவீனம் யாது?

(1) 100 பில்லியன்
(2) 80 பில்லியன்
(3) 70 பில்லியன்
(4) 60 பில்லியன்
(5) 40 பில்லியன்

34) ஏனையவை மாறாநிலையில் பின்வருவனவற்றுள் எது மொத்தக் கேள்வியைச் சுருங்கச் செய்யும்?

(1) இறக்குமதிகளில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி
(2) அரசாங்கச் செலவீட்டில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(3) முதலீட்டில் ஏற்படும் கணிசமான அதிகரிப்பு
(4) ஏற்றுமதிகளில் ஏற்படும் விரிவு
(5) அரசாங்க வரிவிதிப்புக்களில் வீழ்ச்சி

35) "பொருளாதார உறுதிப்பாடு" என்பது

(1) பணவீக்க மற்றும் பணச்சுருக்க உறுதிப்பாடாகும்
(2) குறைந்தளவான பணவீக்கத்துடன் நிறை தொழில் மட்டத்தைப் பேணுதலும் சென்மதி நிலுவை உறுதிப்பாடும்
(3) நாணயமாற்று வீதம் மற்றும் சென்மதி நிலுவை உறுதிப்பாடு ஆகும்
(4) பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் உற்பத்தி மட்டத்தை விரிவாக்குதல்
(5) குறைந்தளவான பணவீக்கத்துடன் நிறை தொழில் மட்டத்தைப் பேணுதல்

36) வணிக வங்கிகளின் சொத்துப் பொறுப்புக் கட்டமைப்பில் இரண்டாம் தர ஒதுக்கு வகையைச் சார்ந்தது பின்வருவனவற்றுள் எது?

(1) கையிலுள்ள காசு
(2) அரச பிணைப்பத்திரங்கள்
(3) வெளிநாட்டுப் பணம்
(4) தளபாடங்களும் உபகரணங்களும்
(5) வங்கிக் கடன்கள்

37) "திரவப் பொறிநிலை" என்பது

(1) மிக இழிவளவான வட்டி வீதமொன்றில் ஊகநோக்கக் கேள்வி வளையி முடிவிலியாகக் காணப்படும் நிலை
(2) ஊக நோக்கக் கேள்வி வளையி இடதுபுறம் செவ்வக அதிபர வளையியாக அமையும் நிலை
(3) திரவத் தேர்வு வளையி வட்டி வீதத்தினால் குறைவடைந்து செல்லும் நிலை
(4) திரவத் தேர்வு வளையிக்கும் பண நிரம்பலுக்கும் இடையிலான தொடர்பினை விளக்கும் நிலை
(5) இழிவளவான வட்டி வீதமொன்றில் பாதுகாப்பு நோக்கக் கேள்வி வளையி முடிவிலியாகக் காணப்படும் நிலை

38) பொருளாதாரமொன்றில் பண நிரம்பில் 10 சதவீதத்தினால் உயர்வடையும் அதேவேளை வெளியீட்டின் அளவு 8 சதவீதத்தினால் அதிகிரக்கின்றது. சுழற்சி வேகம் மாறாத நிலையில் விலை மட்டம் மற்றும் வெளியீட்டின் பணப்பெறுமதியின் அதிகரிப்பு யாது?

| | விலைமட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு | வெளியீட்டின் பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்பு |
|---|---|---|
| (1) | 2% | 5% |
| (2) | 5% | 10% |
| (3) | 2% | 10% |
| (4) | 10% | 2% |
| (5) | 3% | 5% |

39) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் பண நிரம்பல் $(m)$ 2400 பில்லியன் எனவும் மொத்த வங்கி வைப்புக்கள் $(D)$ 1600 பில்லியன் எனவும் தேவைப்படும் ஒதுக்கு வைப்பு வீதம் 10% எனவும் வங்கிகள் மிகை ஒதுக்குகளைப் பேணவில்லை எனவும் கருதுக. மத்திய வங்கி வணிக வங்கிகளிடமிருந்து 100 பில்லியன் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாயின் பின்வருவனவற்றுள் சரியானது

| | பணப் பெருக்கி | புதிய பண நிரம்பல் மட்டம் |
|---|---|---|
| (1) | 10 | 2600 பில்லியன் |
| (2) | 2.5 | 2650 பில்லியன் |
| (3) | 5 | 2600 பில்லியன் |
| (4) | 2.5 | 250 பில்லியன் |
| (5) | 2.5 | 2400 பில்லியன் |

40) ஒரு நாட்டின் பணத்திற்கான கேள்வி தீர்மானிக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் மெய் வருமானம் மற்றும் வட்டி வீதம் தவிர்ந்த ஏனைய காரணிகளில் ஒன்று எது?

(1) பொதுவிலை மட்டம் மற்றும் வருமானம் பெறும் கால இடைவெளி
(2) வருமானம் மற்றும் பணப்பெருக்கி
(3) வட்டி வீதம் மற்றும் வேலையின்மை
(4) உயர் வலுப் பணத்தின் அளவு
(5) உயர்வலுப் பணத்தின் அளவு மற்றும் பணப் பெருக்கி

41) ஒதுக்குத் தேவை 25 வீதமாகவும் வங்கி முறைமையில் இயங்கும் வங்கிகள் 250 மில்லியன் மேலதிக கடன்களை வழங்குமாயின் பண நிரம்பலில் ஏற்படக்கூடிய மாற்றம் யாது?

(1) 500 மில்லியன் அதிகரிக்கும்

(2) 1000 மில்லியனால் குறையும்

(3) 250 மில்லியனால் அதிகரிக்கும்

(4) 100 மில்லியனால் அதிகரிக்கும்

(5) 750 மில்லியனால் அதிகரிக்கும்

42) "மேன்மைப் பண்டம்" தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியான கூற்று

(1) தனியார் நலன்கள் சமூக நலனை விட அதிகமாகக் காணப்படும் பண்டம்

(2) தனியாரால் வழங்கப்படும் அளவு போதாதிருப்பதனால் அரசாங்கம் உற்பத்தி செய்து வழங்கும் பண்டம்

(3) தாராள சந்தையினால் மிக அதிகமாக உற்பத்தி செய்து வழங்கப்படும் பண்டம்

(4) நுகர்வுச் செலவொன்று காணப்படுவதுடன் வெளிவாரிச் செலவுகளை தோற்றுவிக்கும் பண்டம்

(5) நுகர்வோர் தேவைகளை அதிகளவில் பூர்த்தி செய்யும் பண்டம்

43) பின்வருவனவற்றுள் எது சந்தைத் தோல்விக்கு காரணமாக அமையும்?

(1) நிறுவனமொன்றின் உற்பத்திக்கு மிகைக் கேள்வி நிலவுவதால் அந்நிறுவனத்தின் இலாபத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(2) நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்கம் போது சிக்கனமிலிகள் அதிகரித்தல்

(3) தனியார் துறையினர் வெளிவாரி விளைவுகளைக் கருத்தில் எடுக்காமை

(4) தனியார் துறையினர் வளப்பகிர்வில் செயற்திறனைக் கொண்டிருத்தல்

(5) அதிகளவு சிக்கனங்களை தனியார் துறை பேணுதல்

44) எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு கையாளக்கூடிய வழிமுறைகளில் எது கட்டுப்படுத்தாத வழிமுறையாகும்?

(1) உற்பத்தியை முற்றாகத் தடை செய்தல்

(2) உற்பத்தி மானியமொன்றை வழங்குதல்

(3) உற்பத்தி மீது விசேட வரி விதித்தல்

(4) மீள் சுழற்சிக்கு வழியேற்படுத்தல்

(5) வெளிவாரிச் செலவுகளை நிறுவனத்தின் உள்வாரிச் செலவுகளாக மாற்றுதல்

45) குறைந்து செல்லும் வரி முறையின் வரைவிலக்கணமாக அமைவது

(1) வருமானம் பெறும் சகல குழுக்களும் ஒரே வீத வரியினைச் செலுத்துதல்

(2) உயர்ந்த வருமானம் பெறுவோருடன் ஒப்பிடுகையில் குறைந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தின் குறைவான ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்

(3) உயர்ந்த வருமானம் பெறுபவர்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தில் உயர்ந்த ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவார்

(4) வருமானம் உயரும் வேகத்தில் வரி வீதமும் உயர்ந்து செல்லுதல்

(5) குறைந்த வருமானம் பெறுபவர்களுடன் ஒப்பிடுகையில் உயர்வருமானம் பெறுவோர் உயர்ந்த ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்

46) அரசாங்கம் சிலவகையான மேன்மைப் பண்டங்களை இலவசமாக வழங்குவதற்கு காரணமாக அமைவது

(1) மேன்மைப் பொருட்கள் நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்டதனாலாகும்.

(2) கட்டில்லாச் சந்தை முறையின் விளைவுகளை விட அரசாங்கத் தலையீட்டினால் தேறிய சமூக செலவு தோற்றுவதனாலாகும்.

(3) மேன்மைப் பண்டங்கள் தொடர்பாக நுகர்விலும் உற்பத்தியிலும் போட்டிச் தன்மையற்ற காரணத்தினாலாகும்.

(4) சந்தை விலையினைச் செலுத்த சக்தியற்றோர்களின் சமூக நலனை அதிகரிப்பதற்காகவாகும்.

(5) சந்தை விலையைச் செலுத்த சக்தியுள்ளோருக்குரிய சமூக நலனைக் குறைப்பதற்காக வாகும்.

47) அரச பாதீட்டுக் கொள்கை உதாரணமாக அமைவது

(1) வரிகளை அதிகரித்தல்

(2) வட்டி வீதத்தினைக் குறைத்தல்

(3) கொள்கை வட்டி வீதங்களை மாற்றுதல்

(4) சம்பள வீதங்களை குறைத்தல்

(5) சுற்றாடல் தரங்களை நிர்ணயித்தல்

48) சுருக்க இறைக் கொள்கை மற்றும் விரிவாக்கப் பணக் கொள்கைகளுக்குப் பொருத்தமான கூற்று எது?

(1) வரிகளை அதிகரித்தலும் நியதி ஒதுக்கு வீதத்தை அதிகரித்தலும்

(2) வரிகளை அதிகரித்தலும் மத்தியவங்கி அரச பிணைகளை விற்றலும்

(3) நியதி ஒதுக்கை அதிகரித்தல் மற்றும் வரிகளைக் குறைத்தல்

(4) வரி வீதங்களை அதிகரித்தல் மற்றும் திறந்த சந்தையில் / மத்திய வங்கியினால் பிணைகளைக் கொள்வனவு செய்தல்.

(5) வரிகளைக் குறைத்தல் மற்றும் அரசாங்க கொள்வனவுகளை அதிகரித்தல்

49) பின்வரும் அட்டவணையானது இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதனால் ஏற்படும் தனியார் மற்றும் வெளிவாரி செலவு, நன்மைகளைக் காட்டுகின்றது. (யாவும் மில்லியன் ரூபா)

| வகை | பெறுமதி மில்லியன் ரூபா |
|---|---|
| தனியார் செலவு | 150 |
| வெளிவாரி நன்மை | 150 |
| சமூக நன்மை (தேறியது) | 30 |
| வெளிவாரி செலவு | 180 |

மேற்படி தரவுகளில் இருந்து தனியார் நலனின் பெறுமதியைக் கணிக்குக.

(1) 200 மில்லியன் (2) 250 மில்லியன் (3) 210 மில்லியன்

(4) 150 மில்லியன் (5) 260 மில்லியன்

50) அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை தோன்றுவது எதனைப் புலப்படுத்தும்?

(1) முதலீட்டினை நிதிப்படுத்துவதற்குத் தேவையான நிதியினை நிகழ்கால நிதியிலிருந்து பெறமுடியாமை

(2) அரசாங்க சேமிப்புக்கள் மிகையாக உள்ள நிலை

(3) வரி வருமானங்கள் நடைமுறைச் செலவுகளிலும் அதிகமாயிருத்தல்

(4) வரிவருமானங்களுக்குச் சமனாக நடப்புச் செலவினங்கள் காணப்படும் நிலை

(5) மூலதனக் கொடுப்பனவுகளுக்கான செலவுகள் அதிகரித்துள்ள நிலைமை